4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன கவன ஈர்ப்பு?*

திரு. க. பாலகிருஷ்ணன்: *தனியார் சர்க்கரை ஆலைகளில் மாநில அரசு அறிவித்திருக்கின்ற பரிந்துரை விலைகளை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் பதில் வரவில்லை. பதில் வந்த உடனே அதுகுறித்து பரிசீலிக்கப்படும். உட்காருங்கள். நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் என்னுடைய கைக்கு பதில் வரவில்லை. பதில் வந்த உடன் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) இல்லை, துறையிலிருந்து பதில் வராத வரைக்கும் என்னால் எதுவும் சொல்லமுடியாது. துறையிலிருந்து பதில் வரட்டும், நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். இல்லை, இல்லை இன்னும் பதில் வரவில்லை. நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் பதில் கேட்டிருக்கிறோம். பதில் வந்த உடனே அவற்றை எடுத்துக்கொள்கிறேன். திங்கட்கிழமையிலிருந்து வாய்ப்பு இருந்தால் அதை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு). உட்காருங்கள். 2014—2015 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) திரு. குணசேகரன் என்ன?*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பு சர்க்கரை விலை சம்பந்தமானது. அரசு அறிவித்திருக்கிற விலையை தனியார் சர்க்கரை ஆலைகளில் கொடுக்க மறுக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதுதான் பதில் வரவில்லையென்று சொல்கிறேனே? பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். இல்லை, பதில் வரவில்லை உட்காருங்கள். பதில் வரட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன். திரு. வெ. பொன்னுப்பாண்டி என்ன?*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு மாதங்களுக்கு முன்பாக திருச்சுழி தாலுகா, போத்தம்பட்டி கிராமத்தில் ஐந்து குழந்தைகள் நீரில் மூழ்கி*

இறந்தார்கள். ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் வீதம் இறந்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளின் குடும்பங்களுக்கு இதுவரை நிவாரண நிதி வழங்கப்படாமல் இருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இன்னும் அந்த நிவாரண நிதி வழங்கப்படாமல் இருக்கிறது. உரிய காலத்தில் அது வழங்கப்படவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

....

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.294,52,25,000/–, மூலதனக் கணக்கில் ரூ.65,37,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.